1981 ஏப்ரல் 22]

கவனத்தைத் திருப்ப வேண்டும் என்ற ஒரு போராட்ட முயற்சியாகத்தான் இப்படி களத்து மேட்டில் திடீர் குடிசைகளை எழுப்பி இருப்பதாகத் தெரிந்தது. அப்படி களத்து மேட்டில் குடிசைகளைப் போட்டால், அதிகாரிகள் பட்டாக்களை விரைவில் கொடுப்பார்கள் என்று எதிர் பார்த்து போட்டிருக்கிறார்கள்.

அப்படி அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும் வேலைகளை எல்லாம் தனியாக வட்டாட்சித் தலைவர்கள், மேற்கொண்டு அதற்கான முறையான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். களத்து மேடுகளில் திடீர் குடிசைகள் கட்டுவது என்பதெல்லாம் சட்டத்திற்கு முரணான முறைகள் என்பதற்காகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவே தவிர வேறு எந்த முறையிலும் அல்ல.

உலக வங்கியிடமிருந்து பெற்ற கடன்.

*வினா எண். 834—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியிடமிருந்து பெறுகின்ற கடன் தொகைக்கு எவ்வளவு வட்டி செலுத்தப்படுகிறது?

(ஆ) உலக வங்கி தள்ளுபடி செய்துள்ள கடன் தொகை ஏதும் உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தப்படுகின்ற திட்டங்களுக்கு, உலக வங்கியிடமிருந்து நேரடியாக உதவி பெறப்படுவதில்லை. மாநில அரசுக்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதி உதவி வழங்கப் படுகிறது. கடன் பகுதிக்கு மாநில அரசு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி செலுத்துகிறது.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினா எழாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி மத்திய அரசு மூலம் உலக வங்கி கொடுத்து, நாம் பெற்ற தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம், ஒன்று. பெரியார், வைகை பாசனத் திட்டம், இரண்டு

தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் மூன்று. ஆகிய மூன்று திட்டங்களும் உலக வங்கியிடமிருந்து அகில நாடுகளின் வளர்ச்சிச் சங்கங்களின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட திட்டங்களாகும். அதிலே, சென்னை நகர வளர்ச்சித் திட்டத்திற்கு 46 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவு ஆகும். திட்ட மதிப்பீடு அறிக்கையின்படி செலவிடக்கூடிய தொகையில் அகில நாடுகளின் வளர்ச்சிச் சங்கங்கள் கொடுக்கின்ற தொகை 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஆகும். இது இந்தத் திட்டத்திற்கு மட்டும்.

சென்னை நகரம் வளர்ச்சித் திட்டம் 2 என்று எடுத்தால், இது 1981–85 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றக்கூடிய திட்டம். அதிலே தோராயமாக 73 கோடியே 90 லட்சம் ரூபாய் கிடைக்கக் கூடும்.

பெரியார், வைகை பாசனத் திட்டத்திற்காக 20 கோடியே 70 இலட்சம் ரூபாய் உலக வங்கியின் நிதியிலிருந்து கிடைக்கக் கூடும்.

சத்துணவுத் திட்டத்திற்காக திட்டத்தட்ட 50 சதவீதம் அதாவது ஏறக்குறைய 27 கோடி ரூபாய் கிடைக்கக்கூடும் என்று தகவல்கள் இருக்கின்றன.

[முற்பகல் 9–20]

திரு. குமரி அனந்தன் : தமிழக அரசாங்கத்திடமிருந்து இந்தத் தொகையைப் பெறுகிறவர்கள் எவ்வளவு வட்டி செலுத்துகிறார்கள் அந்த வட்டி உலக வங்கி மூலம் நாம் பெறுகிற வட்டி $5\frac{1}{2}$ சதவீதத்தைவிடக் குறைவா அல்லது கூடுதலா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உலக வங்கியின் நிதி உதவி பெரும்பாலும் வட்டி இல்லாக் கடனாக அளிக்கப்படுகிறது. அந்த கடன் உதவிக்கு அவர்கள் நிர்வாக செலவிற்காக $\frac{3}{4}$ சதவீதம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறார்கள். மத்திய அரசால் மாநில அரசிற்கு கடன் வடிவிலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த கடன் தொகைக்கு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். மத்திய அரசு வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரவேண்டும் அல்லது ஒரே மாதிரியாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக $5\frac{1}{2}$ சதவீதம் என்று பொதுவாகப் போட்டு எல்லா மாநிலங்களுக்கும் தருகிற முறையைத்தான் மத்திய அரசு கையாண்டு வருகிறது. ஆக, $5\frac{1}{2}$ சதவீதம் என்ற அளவிற்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் வெவ்வேறு முறையில் வழங்கப்படுகிறது. எவ்வளவு வட்டி விகிதம் என்கிற விவரம் இப்போது என்னிடமில்லை. எனவே தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரலாம்.

1981 ஏப்ரல் 22]

திரு. ரா. கிருஷ்ணன் : விவசாயம் சம்பந்தமாக கடன் வழங்கும் போது உலக வங்கி $\frac{1}{4}$ சதவீதம் வட்டியில் ரிசர்வ் பாங்க்குக்கு கொடுப்பதாகவும் மத்திய அரசு 6 சதவீதத்துக்கு என்று ஒரு பெரிய வட்டிக் கடைக்காரர் மாதிரி ஏற்றி வைத்து கொடுப்பதாகவும் அறிகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் மத்திய அரசு வாங்குகிற வட்டியை கணிசமாகக் குறைக்கக்கூடிய அளவிற்கு தமிழக அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே சொன்னேன். சில நாடுகள் இந்தியாவிற்கு வட்டியே இல்லாமல் இனாமாகவும் தருகிறார்கள். மானியமாகவும் தருகிறார்கள். குறைந்த வட்டியிலும் தருகிறார்கள். சில நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவு வட்டி வைத்துத் தருகிறார்கள். உலக வங்கியும் நமக்குத் தருகிறது. எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாக ஆக்கி மாநிலங் களுக்குத் தருகிற போது 5 சதவிகித வட்டி என்று வைத்திருக் கிறார்கள். நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். வாங்குவதை சராசரியாகப்போட்டு வட்டி விகிதத்தை ஓரளவிற்கு குறைத்துக் கொடுக்கின்ற அளவில் மத்திய அரசு மாநில அரசுகளுக்குத் தரு மானால் மாநில அரசு வழங்கும்போது அதிக சிரமங்கள் இல்லா மல் வழங்க முடியும். உலக வங்கி தருவதன் மூலம், பெறுகிற நிதி உதவி மூலம் செய்யப்படுகிற திட்டங்கள் மாநில வளர்ச்சிக்கு பயன்படுகிற திட்டங்களாகும். அல்லது பொது மக்களுக்குப் பயன்படுகிற திட்டங்களாகும். தனியார்களுக்குப் பயன் படுகிற திட்டங்களல்ல. வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இருந்தாலும் மத்திய அரசு $5\frac{1}{2}$ சதவீதம் என்று தான் நிர்ணயித்திருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன் : வருகிற ஆண்டில் வருமானம் வருகிற திட்டங்களுக்காக மட்டுமே உலக வங்கி கடன் உதவி வழங்குவது என்று, குடிநீர் திட்டம், சத்துணவுத் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு கடன் உதவி வழங்குவது பற்றி மறு பரிசிலனை செய்வதாகவும், தற்காலிகமாக உலக வங்கி இப்படிப்பட்ட திட்டங்களுக்குக் கடன்உதவி வழங்குவ தில்லை என்று தீர்மானித்திருப்பதாகவும் ஒரு செய்தி உலாவு கிறதே அது உண்மையா? அப்படிப்பட்ட நிலை இருந்தால், அரசு அதைத் தெளிவுபடுத்த முனையுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்வதற்குத் தான் இருக்கிறது. அதேமாதிரி பெரியாறு—வைகை பாசனத் திட்டம் ஓரளவுக்குப் பயன்படக்கூடிய திட்டம், இருந்தாலும் எதிர்பார்க்கிற பலனை எதிர்பார்க்க முடியாது. சத்துணவுத் திட்டத்தின் மூலம் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. ஏழை

எளிய குழந்தைகள், பால் கொடுக்கும் மகளிர் ஆகியோருக்கு ஊட்டச் சத்து வழங்குவதன்மூலம் அவர்கள் உடல்நலத்தைப் பேணுவதற்காக வழங்கப்படுகிற திட்டமாகும். இதில் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. நமக்கு அவர்கள் வழங்குகிற தொகைகள் எல்லாம் வளர்ச்சி கருதியும் நாட்டின் நலிவைப் போக்கவும்தான் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் அப்படிப்பட்ட கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு. இரா. கருப்பையா : உலக வங்கி வட்டியில்லாமல் கடன் கொடுக்கிறது. $2\frac{1}{2}$ சதவீதத்துக்கும் கடன் கொடுக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல்படி $\frac{3}{4}$ சதவீதத்துக்கு மத்திய அரசுக்கு கடன் கொடுக்கிறது. மத்திய அரசு நாம் $5\frac{1}{2}$ சதவீத வட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். $2\frac{1}{2}$ சதவீதத்துக்கு வாங்கி $5\frac{1}{2}$ கேட்பதை மாற்றி இந்த வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறதா? அது சம்பந்தமாக மத்திய அரசு என்ன பதில் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். ஆகவே, இந்த வட்டி விகிதத்தைக் கூடுமானவரை குறைத்தல், அதன்மூலம் அதிகப் பலன்கள் ஏற்படும் என்று என்.டீ.சி. கூட்டத்தில் நம் மாநிலம் மட்டுமல்ல; இதர மாநிலங்களும் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். மொத்தத்தில் சில இனங்களுக்கு அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றியெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அதற்காகும் செலவு, மற்றும் எஸ்டாப்ளிஸ்மென்ட் செலவு ஆகியவைகளையெல்லாம் சேர்த்து $5\frac{1}{2}$ சதவீத வட்டி கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இருந்தாலும், இதை இன்னும் குறைத்தால், மேலும் பலன்கள் ஏற்படும் என்று மாநில அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடம் நாம் கடன் வாங்குகின்ற நேரத்தில், உலக வங்கி என்னென்ன நிபந்தனைகள் போடுகிறது? அந்த நிபந்தனைகளிலே நமக்கு ஆதரவான ஷரத்துகள் இருக்கின்றனவா? அந்த நிபந்தனைகளில் ஏதாவது அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு விதமான நிபந்தனைகள் வைக்கிறார்கள். அது முழுவதையும் தொகுத்துச் சொல்வதற்கு இயலாமல் இருக்கிறது. ஆனால், அரசியல் உள் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. உலக வங்கியிடமிருந்து

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22]

வாங்கும் தொகையை சிலபல நாடுகள் அந்த நிதியை வேறு சில காரியங்களுக்காக பயன்படுத்துகின்ற காரணத்தால், நிபந்தனைகள் விதிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு செலவழிக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தால், அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக சில நிபந்தனைகளை விதிக்கிறார்களே தவிர, அந்த நிபந்தனைகள் நமக்குப் பாதகமாக அமையாத வகையிலே நாம் ஏற்றுக்கொள்ளலாம். பாதகமாக வருமானால், அந்தக் கடன் தேவையில்லை என்று நாம் சொல்லி விடுவோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உலக வங்கியிடமிருந்து மத்திய அரசின் மூலமாக ஒவ்வொரு திட்டத்திற்கும் இவ்வளவு தொகை கிடைக்கும் என்று கருதுகிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து, மத்திய அரசாங்கத்தின் மூலமாக பெற்ற மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, இந்தத் திட்டங்களுக்காக அவர்கள் நிதி தந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் திட்டங்கள் நிறைவேற, நிறைவேற தருகிறார்கள். மொத்தத்தில் இத்திட்டங்களுக்கு இவ்வளவு தருவார்கள் என்று திட்டமிட்டு இவ்வளவு தொகை எதிர்பார்க்கலாம் என்றும், வராது என்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் தொகையை ஒதுக்கீடு செய்கிறார்கள். அது வராமல் இருக்காது. அந்த அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தற்போது மத்திய அரசு அதற்கென தொகையை ஒதுக்கிக்கொண்டு வருகிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி எந்தெந்தத் திட்டங்களுக்கு, எந்த அடிப்படையில் கடன் வழங்குகிறது ? கொடுக்கக்கூடிய கடனுக்கு வட்டி விகிதம் நாட்டிற்கு நாடு வித்தியாசப்படுகிறதா? அல்லது ஒரே வகையில் அளிக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், சென்னை நகர வளர்ச்சித் திட்ட நிலை—1, சென்னை நகர வளர்ச்சித் திட்ட நிலை—2, பெரியார்—வைகைப் பாசனத் திட்டம்—77-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1982-ல் முடிகிற திட்டம். சத்துணவுத் திட்டம்—1980-லிருந்து ஆரம்பித்து 85-ல் முடிகிற திட்டம் இந்த நான்கு திட்டங்களுக்கும், உலக வங்கி நிதி அளித்து வருகிறது.